மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1984 ★ இதழ் 106

# வழிகாட்டிய உத்தமர்



ஒரு குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு வழி காட்டத் தெரியாத மக்கள் மத்தியில் தோன்றி, உலகத்துக்கே வழிகாட்டி, உத்தமர் எனப் போற்றப் பெற்ற ஒரே ஒரு மனிதர். மிகவும் நல்லவராய் வாழ்தல் மிகவும் கூடாது என்று மக்கள் சலிப் படையும் காலகட்டத்தில், உலுத்தர்களையும் சகோதர பாசத்தோடும் பற்றோடும் கட்டியணைத்து முத்த மிட்டவர் அந்த மனிதர். அந்த மனிதரை உலகச் சிறுவர்கள் எங்கள் தாத்தா என்று அன்பு நேசம் ஒழுக விசுவாசித்தார்கள். உலகப் புகழ்பெற்ற அறி வாளிகள் தங்களுக்கு ஒளியூட்டி வழிகாட்டிய உத் தமர் என்று கொண்டாடினார்கள். உப்பின்றி, இனிப்பின்றி, உண்ணும் வகையில் சிக்கனம், அரையில் ஒரு துணி, தோளில் ஒரு துணியணிந்து உடையில் ஒரு சிக்கனம், உறைவிடத்தில் ஒரு சிக் கனம், உரையாடுவதில் ஒரு சிக்கனம், சிறிய சொற்களில் சிறிய வாக்கியங்களில் பெரிய பாடங்கள் கற்பித்தலில் ஒரு சிக்க னம், இந்தச் சிக்கனங்களால் சிக்கல்களைத் தீர்த்த பெரிய மேதாவிலாசம், நாட்டில் எந்தப் பதவியும் நாடாமல் துறவு நிலையில் தூய்மை தழுவிய தெய்விகம், என்றோ எப்பவோ காவியத்தில் வந்த அரிச்சந்திர னிடம் கற்ற பொய்யாமையை இன்றைய உலகத்தவருக்கு உள்ளத்தாலும், வாக்கா லும், செயலாலும் உண்மை, வாய்மை, மெய்மையென நிரூபித்த தியாக வாழ்க்கை.

புறத்தில் உள்ள இருளை நீக்கும் விளக் குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, சான் றோர்களுக்கு அகத்திருள் நீக்கும் பொய் யாமையாகிய விளக்கே விளக்கு.

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.**

★ நிறைமனிதன் எதற்கும் ஆசைப்படுவதில்லை ★

உ
சிவமயம்






## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்
சேத்திரத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச்சிற் றம்பலமும் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ் சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்

நாம் வாழும் நிலவுலகத்தின் பொருட்டுச் சிவபெருமான் திருக்கயிலாயத்தே எழுந்தருளியுள்ளார். அவர் அறக் கருணையும் மறக் கருணையும் அருளியவாறிருத்தலின் அவரையே நாமெல்லோமும் வாழ்த்தி வணங்குதல் வேண்டும். அவர் எமக்காக வேண்டிப் பல திருத்தலங்களில் எழுந்தருளியுள்ளார். இத்தலங்கள்தோறும் அவரே எழுந்தருளியுள்ளாராகலின், நாம் இத்தலங்களின் திருநாமங்களை ஓதினுல் அவரை வணங்குவதற்கு நிகராகும் எனக் கருதிய திருநாவுக்கரசுநாயனுர் இத்திருத்தலங்களின் பெயர்களை க்ஷேத்திரக் கோவையெனப் பாடித் தந்துள்ளார். எனவே நாம் திருத்தலங்களின் திருநாமங்களை ஓதியுய்வோமாக.

## நலம்தரும் அரசாங்கம்

பிரித்தானியாவில் எந்தக்கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் அந்த அரசாங்கம் நாட்டை ஒரு நலம்தரும் அரசாகப் பேணுவது வழக்கம். அஃதாவது ஒரு Welfare state. அங்கே 5 முதல் 15 வயதுப்பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியோடு பெருமளவில் பல்கலைக் கழகங்களிலும் உபகாரச் சம்பளவசதிகள் உண்டு.

### ஊழ்

நல்வினை தீவினை என்னும் இருவினைப்பயன்களும் செய்தவனை நாடி நிற்கும் முறைமை

நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லல் படுவது எவன்.

நல்வினை நன்மைகளைக் கொடுக்கும் போது அவற்றை நல்லன என்று மனம் பொருந்தி அனுபவிக்கிறவர்கள், தீவினை விளையுங்காலத்துத் துன்பங்களையும் அவ்வாறு நுகராது, மனவருத்தப்படுவது எதனுல்?

**Fate**

Why should they who welcome and enjoy well when prosperous feel sorry to suffer in evil days? Since both states are decreed by fate.

## 1984 ஒக்ரோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | சரஸ்வதி பூசை ஆரம்பம் இரவு 9.03 அட்டமி |
| 2 | செவ்வாய் | — | அட்டமி நவமி காந்தியடிகள் தினம் |
| 3 | புதன் | — | சரஸ்வதி பூசை மகாநவமி கேதாரகௌரி விரதாரம்பம் நவமி இரவு 8.41 வரை வண்ணை பெருமாள் கோயில் தேர் |
| 4 | வியாழன் | — | விஜயதசமி அருணந்தி சிவாசாரியார் குருபூசை |
| 5 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 7 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 8 | திங்கள் | — | நடேசர் அபிஷேகம் |
| 9 | செவ்வாய் | — | பூரணை விரதம் போயா |
| 13 | சனி | — | கார்த்திகை விரதம் |
| 17 | புதன் | — | அட்டமி முன்னிரவு 10.38 |
| 18 | வியாழன் | — | அட்டமி நவமி |
| 19 | வெள்ளி | — | நவமி பகல் 7-53 வரை |
| 20 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 21 | ஞாயிறு | — | வைணவ ஏகாதசி |
| 22 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 23 | செவ்வாய் | — | தீபாவளி |
| 24 | புதன் | — | அமாவாசை விரதம் கேதாரகௌரி விரதம் |
| 25 | வியாழன் | — | கந்த சஷ்டி விரதாரம்பம் |
| 31 | புதன் | — | முற்பகல் 10-47 மேல் கோஷ்டா அட்டமி |

★ சோம்பேறியைச் சமுதாயம் தாங்குகிறது ★

## சராசரி வருமானம்

உலகநாடுகளின் செல்வம் சுபீட்சம் என்பனவற்றைக் கணிப்பவர்கள் அந்நாட்டில் வாழும் மக்களின் தனிப் பட்டவரின் சராசரி வருமானத்தைக் கணித்தல் ஒரு சம்பிரதாயக் கணிப்பு. இந்தக் கணிப்பில் அமெரிக்கா, கனடா முதன்மையானவை. பின்னர் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பெல்சியம், நியூசிலந்து, நோர்வே, சுவீடின், சுவிற்சர்லாந்து என்பன வருகின்றன.

## மூன்றுமடங்கு குற்றவாளி

நீங்கள் விரைவில் ஆத்திரப்பட்டு, ஒருவர்மீது குற் றஞ் சுமத்தி உங்கள் ஆள்காட்டி விரலை அவர்மீது குறி வைப்பதுண்டு. அதே வேளையில் உங்கள் மூன்று விரல் கள் உங்கள்மீது குறிவைத்துக் காட்டுகின்றன என்பதை யும் நீங்கள் அறிதல் வேண்டும்.

## சிவ தீட்சைப் பேறு

சைவசமயத்தவர்களின் சமயப் பிரவேசம் எனப் பாரம்பரியமாக நடைபெற்றுவரும் நற்கிரியை ஒன்று சிவ தீட்சையாகும். அதைச் சமயதீட்சை என்றும் சொல்லுவார்கள். தீட்சை பெறுதவர் செய்யும் கருமங் கள் பயன் தருவதில்லை. அவை செல்லாக் காசுகள் போன்றவை, அன்றேல் முத்திரையிட்டு உறுதிப்பாடு செய்யாதனவெனவும் விளக்கலாம்.

சிவ சின்னங்களை முறைப்படி தரிக்கவும் பூணவும், சிவமூல மந்திரத்தை முறையாக உச்சரித்துத் தம்மைக் காத்துக்கொள்ளவும், தானதருமம் முதலிய சற்கருமங் கள் செய்யவும் உத்தரவு பிறப்பிப்பது சமய தீட்சை யாகும்.

சமய தீட்சைதானும் எமக்கு வாழ்விலும் தாழ் விலும் நம்மோடு உடனுறைந்தாற்போல் நமக்கு மிக நெருக்கமானவராய சைவக் குருக்கள் சைவாகம, பத்ததி கள் வழிகாட்டச் செய்வதே அமைவாகும்.

சைவசமயத்தவர்கள் இக்காலத்தில் விசேட நாள் களில் விடாப்பிடியாகத் தீட்சை வைத்துக்கொள்வதில் ஆர்வங்காட்டி வருகின்றார்கள். அவர்களை வணங்கி அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டிப் புத்தகங்கள், பாரா யணத் திருமுறைத் திரட்டுகள், நால்வர் பெருமக்களின் மூவர்ணப் படங்கள், நடேசப் பெருமானின் அதியற்புத ஆடற் படங்கள், திருநீற்றுப் பொட்டலங்கள், கூட்டு வழி பாட்டுக்கு அவர்களை ஒன்றுபடுத்தும் தாளங்கள் இன்ன பிறவும் வரையாது வழங்குபவர் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா என்பதில் சைவர்கள் பெருமைப்படுகிறார்கள்.

எங்கெங்கே யார் யாவர் தீட்சை பெறுகிறார்களோ அங்கெல்லாம் விரைந்து செல்லும் கடமையை நியமமாகக் கொண்டவர் கனகராசா. அண்மையில் கொழும்புத் துறை, நெடுந்தீவு, நல்லூர் ஆகிய இடங்களில் நூற்றுக் கணக்கானோர் தீட்சை பெற்றார்கள். நெடுந்தீவில் தீட்சை பெற்றவர் கூட்டத்தில் எண்பத்துநான்கு வயது கடந்த முதியவரும் இருந்தார் என்பதைக்கண்டு, ஊரவர்கள் உயர் அதிகாரிகள் உளம் மகிழ்ந்து வாழ்த்தினார்கள். வளர்க சைவம்!

## ஆவரசு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலா சாலை, முத்துத்தம்பி வித்தியாசாலை ஆகிய சாலைகளின் விடுதி மாணாக்கர்களுக்குப் பாரம்பரியமாகப் பழகிவந்த தொரு பழக்கம் நீராடும்போது, அயலில் பெருமளவில் முளைத்து வளர்ந்த பொன்னாவரசம் பூ, தளிர் முதலிய வற்றைக் கசக்கித் தேய்த்துக்கொள்ளுதல், இவ்வித பழக் கத்தின் பயனாக அந்தக்காலத்தில் கண்ணாடி போட்டவர் கள் எவரையும் நாம் கண்டதில்லை.

பொன்னாவரசின் இலை, பூ, பட்டை, வேர் எல்லாமே பயன் தருவன. பூவைப் பலவிதமாகப் பாகஞ் செய்து உணவோடு சேர்ப்பதால் நோயணுகாப் பயன் பெறுவ தோடு தேக மினுமினுப்பும் உண்டாகும். உடம்பில் சூடு, கண்ணில் எரிச்சல் உள்ளவர்கள் ஆவரசம் பூவை அவித்து ஆறவிட்டு வடித்துப் பருகிப் பயன் காணலாம்.

எண்ணெய் முழுக்குக்கு, அல்லது தலையில் அழுக் கைப் போக்குவதற்கு, பொன்னாவரசம் பூவையும் பச் சைப் பயறையும் நீரில் ஊறவிட்டு அரைத்துத் தலையில் தடவி நீராடிப் பயன் காணலாம். இதற்கு வெந்நீர்க் குளிப்பு நல்லது. உடல்நோ முதலியன தீரும்.

மூலநோய் வெகுவாக வாட்டும். அதற்கு கைகண்ட மருந்து ஆவரசம் பூவும், அறுகம்புல் வேருடன் சேரத் துப்புரவாக இடித்து வந்த தூளை – சூரணத்தை, நெய் யுடன் உருட்டி உண்பதாகும்.

## தசகாரியம்

தமிழர் வாழ்வில் சைவசித்தாந்தத் துறையில் தச காரியம் கலங்கரை விளக்கம் போன்றது. புத்த சமயத் திலும் ஒருவகைத் தசபாரத உண்டு. அவற்றைப் பத்துக் கற்பனைகள் என வழங்குவர். அண்மைக் காலத்தில் ஒரு சமயம் ஞானசீல தேரோ என்னும் புத்த குரு இந்தப் பத்துக் கற்பனைகளை உயரக் கிளப்பியபோது ஸ்ரீமான் பண்டாரநாயக்க எம். ஈ. பி. சார்பில் கொழும்பில் நகர மண்டபத்தில் நடைபெற்ற பாரிய பொதுசனக் கூட்டத் தில் ஏற்றுக்கொண்டார். இந்தப் பத்துக் கற்பனைகளைத் தமிழர் முன்னர் நன்கறிந்தவர்கள். தசபாரமிதைகள் என அவர்கள் கூறியவை தானம், சீலம், க்ஷமை, வீரியம், தியானம், பிரஜ்ஞை, உபாயம், தயை, பலம், ஞானம் என்பனவாம். இவற்றைக் கண்டதுமாத்திரமல்ல, தங்கள் காப்பியங்களிலும் பாடிக்கொண்டனர். நீலகேசி என்பது சிறு பஞ்சகாப்பியங்களுள் ஒன்று.

தானம் சீலமே பொறை
தக்கதாய வீரியம்
ஊனமில் தியானமே
யுணர்ச்சி யோடுபாயமும்
மானமில் லருளினை
வைத்தலே வலிமையும்
ஞானமீரைம் பாரமிதை
நாடுங்கா லிவைகளும்.

★ சமுதாயத்தை உழைப்பவன் தாங்குகிறான் ★

## பன்மொழிப் புலவர் போற்றும் பைந்தமிழ்

உலகில் பல மொழியறிவு பெற்ற பேராசிரியர்கள் பலரிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு முகமாகத் தாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதை எங்குங் காணோம் என்று கூறியுள்ளார். தமிழில் ஒரெழுத்துச் சொற்களும் ஓசைச் சொற்களும் இருத்தல் அதன் பெருஞ் சிறப்புக்களில் ஒன்று. ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உள்ள தன்மைபோல், பல பொருள் பயக்கும் ஒரு சொல் அமைப்பும் தமிழில் மிகுதியாயுண்டு.

## மாற்றருஞ் சிறப்பின் மரபியல்கொண்ட மாண்புள்ள தமிழ்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அரிய இலக்கணஞ் செய்த தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் நூலில் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் மாறுவியல்பின் மரபினை வகுத்துள்ளார். அன்றெழுந்த நூல் இன்றும் பயனுள்ளதாகவும், பழகவினியதாகவும் இருப்பது தமிழின் மாட்சியாகும். தொல்காப்பியரே என்மனார் புலவர் என இறுதியில் வரும் சூத்திரங்கள் செய்துள்ளார் எனில் அவருக்கு முந்தியவர் பின்பற்றிய மரபொன்றிருந்தது வெளிப்படை. அந்த மரபைத் திருவள்ளுவர் முதலாக இன்றைய புலவர் வரை எப்புலவரும் மீறத் துணியவில்லை. இனிமேல் வருபவரும் துணியார், துணியார். தமிழ் மரபில் சொல் மரபு, பொருள் மரபு என்னும் இருபெரு மரபுகளும் இணையில்லாதவையாகும்.

மரபே தானும்,

நாற்சொல் இயலான் யாப்புவழிப்பட்டன என்று தொல்காப்பியர் அன்று கூறியவை இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வேற்று மொழிச் சொல் என்பனவாகும். மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் சொற்களையும் பொருளையுமே புலவர்கள் கையாளல் வேண்டும் என்பதும் தொல்காப்பியர் கருத்தாகும். மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை என்றும், அவர் யாத்துள்ளார்.

## பொன்னின் பெயர்கள்

சைவசித்தாந்த சாத்திரத்தில் பதி, பசு, பாசம் என்னும் இம் மூன்றைப்பற்றிக் கூறுவதற்கு எத்தனையோ நூல்கள் எழுந்துள்ளன. இதற்கு ஏன் இத்தனை நூல்கள் என்று தாமே ஒரு வினாவை எழுப்பித் தாமே விடையையும் அன்று கூறியவர் உமாபதி சிவாசாரியராவர். பொன் என்னும் உலோகத்துக்கு எத்தனை பெயர்கள் உண்டு தெரியுமா? அதற்கு ஏன் இத்தனை பெயர்கள்? அத்தனை பெயர்களையும் நாமறிதல் நன்று.

ஏமம், சந்திரம், உருக்குமம், அரியம்,
இரணியம், பேசம், கிருசநம், உலோகம்,
கனகம், காஞ்சனம், பருமம், அமிர்தம்,
மருத்து, தத்திரம், சாதரூபம்.

## உத்தரபிரதேசத்து ஊர்வலம்

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் பெரு நிலப் பரப்பில் காடுவெட்டி வர்த்தக வளம் பெருக்கத் திட்டமிட்டவரின் செயல் தவிடுபொடியாகிவிட்ட செய்தி கிடைத்துள்ளது. மாணுக்கர் உட்பட ஊர் மக்கள் ஊர்வலமாகச் சென்று காட்டுப்புறத்தில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்து தடுத்ததால் மரங்கள் தறிபடாமல் தப்பிவிட்டன. பனை தறிப்பாரைத் தடுக்க இளைஞர்கள் முன்வரல் வேண்டும். தேவை நோக்கி அருமையாக உத்தரவெடுத்துத் தறித்தலை நாம் தடுக்கவில்லை.

## பேசாப் படம்

இன்று பேசும் படம் நாடு நகரமெங்கும் திரையிடப் பெற்றுச் சர்வசாதாரணமாக சனரஞ்சகமாக நிலவுகிறது. காலை, நண்பகல், மாலை, முன்னிரவு நேரங்களில் படங்கள் ஆயிரக்கணக்கானோரை மகிழ்விக்கின்றன. இற்றைக்கு ஒரு தலைமுறைக் காலத்துக்கு முன் பேசாத படம் திரையுலகில் பெரிய நூதனமாயிருந்தது. யாழ்ப்பாணங் கண்ட படங்களுள் வள்ளி திருமணம் ஒன்று.

இங்கிலாந்தில் ருமொன் நொவாரோ நடித்த படங்கள் பெரும் பரபரப்பை உண்டாக்கின. The Prisoner of Zenda, The Student Prince, Ben Hur, The Sheik, Steps out.

முற்றொடர்:


## சைவம் மணக்கும் தமிழ் நூல்கள்

121. சிவரகசிய காண்டம்
அனந்தவைத்திய நாதசிவன்
122. சிவராத்திரி விரத நிர்ணயம்
விசுவநாத செட்டியார்
123. சிவலிங்க மகத்துவம்
ஆண்டாள் அம்மையார்
124. சிவவாக்கியர் பாடல்கள்
சிவவாக்கியர்
125. சிவாகமப் பஃறொடை வெண்பா
சோமசுந்தர நாயக்கர்

## அழித்தலிலும் ஆக்கப்பணி

காடு வெட்டியபின் பயன் தரு மரங்களை நிரையாக நாட்டுபவன் நாகரிகம் அறிந்தவன், நீதி முறையறிந்தவன். குடியிருப்புக்காகக் குறைந்த இடப் பரப்பைக் கொள்வதால் தீங்கில்லை. வர்த்தகப் பெருக்கத்துக்கு வழிவகுக்கக் காடு வெட்டுதலைத் தவிர்த்தல் அவசியம். பழைய மன்னர்களின் குளங்களையடுத்த காடுகளை வெட்டிக் குடியேற்றலாம். பெருங் காடுகளை வெட்டி விறகாக்குதல் வீண்விரயமாகும். மரங்கள் இல்லா உலகம் ஒரு உலகமாகாது என்று நிபுணரான ரேபேட்ணம்ப் என்பார் (World Without trees) எழுதியுள்ளார்.

★ உத்தமன் ஒழுக்கத்தைப் பாதுகாக்கிறான் ★



## பஞ்ச தந்திரம்

திர்க்கதரிசனமும் பரம்பரைச் சேவையும் உள்ள மந்திரிகள் அரசில் இல்லாமற் போனுல், அந்த அரசு நிச்சயமாகவும் துரிதமாகவும் நாசமடையும்.

சாந்தமான நயத்தை விட்டு அதற்கு எதிராக அரசுக்கு யோசனை சொல்பவன் மந்திரி உருவிலிருக்கும் எதிரியே. புத்திசாலிகள் இதை அறிந்துகொள்கிருர்கள்.

துரிதமாகச் செய்ய வேண்டிய காரியத்தைத் துரிதமாகச் செய்து முடிக்காவிட்டால் தேவர்கள் கோபமடைகிருர்கள்.

விரோதிகளோடு ஒரு விஞடியேனும் கூடி வாழ்வதை விட எரியும் நெருப்பில் விழுவதே மேல்.

நீசப் பாவிகளான அதிகாரிகளின் கொடூரமான பேச்சுக்களை எப்போதும் கேட்டுச் சகித்தவாறே, நல்ல காலத்தை எதிர்நோக்கி, அறிவும் பலமும் பெற்றவன் இருந்துவரல் வேண்டும். பீமன் முன்னர் புகையிலே அமுக்கடைந்து, சமையல் வேலையில் ஈடுபட்டு ஒரு வருட காலம் துன்பப்பட்டவன்தானே. வீராதி வீரஞன அருச்சுனன் பெண்கள் அணியும் வளையல்களை அணிந்து பிரஹன்னை என மாறுவேடம் பூண்டவன்தானே.

## பஞ்ச புராணத் திரட்டு

சைவசமயத்தவர்கள் தனித்தும், கூட்டாகவும், வீடுகளிலும் ஆலயங்களிலும் பண்ணுேன்றிப் பாடிப் பயன் பெறுவதற்கு வாய்ப்பானவை பஞ்ச புராணங்கள். இவற்றை நாம் பக்தி சிரத்தையோடு பன்ஞள் ஓதிப் பயன்பெறுதல் வேண்டும் என்பது நாவலர் அவர்களின் அபிலாசை, பெருவிருப்பம், பெருவிண்ணப்பம். பஞ்ச புராணம் என்பன தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம். இவையே அருட்பாக்கள் என்று நாவலரவர்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்தும் இடித்துரைத்தும் வழிகாட்டியுள்ளார்கள். இன்றைய தேவை நோக்கி, மில்க்வைற் தொழிலதிபர், பஞ்ச புராணத் திரட்டு ஒன்றை மூன்ரும் பதிப்பாக அழகிய முறையில் வெளியிட்டுள்ளார்.

## நீதி சாரங்களான வாழ்க்கை அநுபவங்கள்

15. படிப்பில் ஆர்வமும் நாட்டமும் அபிமானமும் கொண்டவன் பசியையோ, நித்திரையையோ பொருட்படுத்தமாட்டான்.

16. கடமை உணர்ச்சியுள்ளவன் கடிகாரத்தைப் பார்ப்பதில்லை. சம்பள உயர்வையோ லீவுக் கணக்கையோ பார்ப்பதில்லை.

17. சுத்தமான சந்நியாசிக்கு ஆண் பெண் வேற்றுமை தெரியாது உற்ருர், மற்ருர் என்பது தெரியாது.

18. வயது, சொத்து, வீட்டு நிலை, மந்திரம், தானம், பெண் சுகம் என்பனவற்றைப் பிறருடன் பேசலாகாது.

19. தாம் தாம் செய்கின்ற புண்ணிய பாவங்களினுல் வருகின்ற நன்மை, தீமைகளையிட்டு மகிழவோ துன்பப்படவோ தேவையில்லை.

20. தமிழன் வாழ்வில் பொருள் வயிற் பிரிதல் என்பது ஒரு துறை. கட்டிளம் மனைவியையும் விட்டுக் காதலன் பொருள் தேடப் பிரிதல், தான் தேடிய பொருள் கொண்டு வாழ்தல் உத்தமமானதால் என்பர்.

## நரித் தந்திரம்

ஒரு காட்டில் ஒரு நரியும் பூனையும் நண்பர்களாய் இருந்தன. சிலசமயம் அவை இரண்டும் கூடி உலாப் போவது வழக்கம். ஒருநாள் உலாப்போன வழியில், நரி பூனையைப் பார்த்துக் கேட்டது. "நண்பா இந்த நேரம் வேட்டையாடுவோர் நாய்களோடு இங்கே வந்தால் நீ என்ன செய்வாய்?". அதற்குப் பூனை சொன்னது. "எனக்கு மரம் ஏறத் தெரியும் வேறெதுவும் தெரியாது. நான் விரைவாக மரத்தில் ஏறித் தப்பிக் கொள்வேன்."


"பூ இவ்வளவுதான் உனக்குத் தெரியுமோ? எனக்கு நூறு தந்திரங்கள் தெரியும். நான் புத்திசாலி. நான் தந்திரமாகத் தப்பிக்கொள்வேன்" என்று பூனையைப் பரிகாசம் பண்ணியது.

அந்த நேரம் வேட்டை நாய்கள் குரைத்துக்கொண்டு அங்கே ஓடி வந்தன. உடனே பூனை மரத்தில் ஏறிக் கொண்டது. நரி தன் தந்திரங்களுள் எதனுல் தப்பிக் கொள்ளலாம் என யோசித்தது. அதற்குள் வேட்டை நாய்கள் நரியைக் கடித்துக் கிழித்துக் கொன்றன.

## ஏடு தொடக்க வேண்டுமா?

பிள்ளைகளுக்கு விஜய தசமி நாளில் சைவச் சூழலில் ஆசாரசீலராய் எழுத்துக்கள் சொல்லி அட்சராரம்பஞ் செய்ய விரும்புவோர், மங்கலகரமான மஞ்சள் ஓலையில் எழுதப் பெற்ற அரிவரி ஏடுகளை முன்னதாகவே மில்க்வைற் தொழிலதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம். பெருந் தொகையாகப் பெறுவதற்கு விரும்புவோர், தயவு செய்து தங்களால் இயன்றளவு, ஓலைச் சார்வு தந்துதவுங்கள்.

முற்றொடர்:



சிறுவர் பகுதி

## அவிழுங்கள் பார்ப்போம்

1. சின்னஞ் சிறு கதவுகள்
சிங்காரமான கதவுகள்
திறக்கச் சாத்தக் கதவுகள்
சிறிதும் சத்தம் போடாவாம்.

2. தட்டுத் தட்டாய் விரிந்திருக்கும் அந்தஇலை
தண்ணீரில் படுத்திருக்கும் பஞ்சையிலை
உண்ணும்போது எமக்குதவும் கலமாம் இலை
அடுக்கடுக்காய் இதழ்விரியும் பூவின் இலை
அந்த இலையின் பெயரை இயம்புவீரே.

3. பச்சைபசியமேனி, பச்சையான இறகு
பவளம் போன்ற மூக்கு, பறந்து திரியும் தத்தை
கொச்சை மொழியும் பேசும்
கொவ்வைப் பழமும் தின்னும்.

4. தத்தித் தத்தித் திரிவான்
தண்ணீரிலும் குதிப்பான்
தாளம் போட்டுப் படிப்பான்
தரையில் எறும்பைத் தின்பான்.

1. கண்ணிமைகள். 2. தாமரை இலை.
3. கிளி. 4. தவளை.

## ஞானவைரவர் விழாக்கோலம்

யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் இன்று ஞானப் பண்ணையாய் மலர்ந்து வருவதைக் கண்கொண்டு காண லாம். கோண்டாவில் சந்தியில் பிள்ளையார் கோயிலும், குடைச் சாமியார் சமாதியும் பிறவும் அருள் கொழிக் கும் மையங்களாயமைய, இப்பால் போக்குவரத்துப் பகுதியினர் அலுவலகத்தை அலங்கரித்து, ஆனந்த கோலா கலமாகக் காத்தருள் செய்து, அருள்பாலிப்பவர் ஞான வைரவர். அவரின் விழாக்களில் இ. போ. சபை ஊழியர் கள், பெரியவர்கள் காட்டி வரும் ஈடுபாடு பெரிதாகும். இவர்களை மேலும் ஈடுபடுத்துமுகமாக, மில்க் வைற் தொழிலதிபர் கையடக்கமான வெள்ளைத்தாளில் வைரவ சுவாமிகளின் ஆனந்த கோலாகலத் திருவுருவப் படமும், அவரின் தோத்திரம் ஒன்றும் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு விநியோகித்துள்ளார்கள்.

# Give one word for

1. Gave back what was owed
2. Three feet
3. Killed with gun
4. Used to create breeze
5. Term of affection
6. You and I
7. People who are not us
8. To make a hole in the ground
9. Part of the body above the neck
10. Dry grass
11. To jump on one leg
12. Noice made while sleeping
13. Person of extra ordinary ability
14. Collection of wild animals in circus
15. Syrup taken from a tree
16. Larger than a brook
17. Low in price
18. Piece of metal used as money

1. Repaid 2. Yard 3. Shot 4. Fan 5. Darling
6. We 7. Others 8. Dig 9. Head 10. Hay
11. Hop 12. Snore 13. Genius 14. Menagerie
15. Sap 16. River 17. Cheap 18. Coin

## பாட்டிலே கேள்வி

(பிறையணிவோன்)

1. உலகில் உள்ள ஏரிகள்
உருவம் மிகவும் பெரிதாக
இலங்கும் ஏரி அதன் நாமம்
எடுத்துச் சொல்ல வல்லாயோ.

2. உலகில் பாயும் ஆறுகளில்
ஓடும் நீளம் அதிகமுள்ள
உலம்பிச் செல்லும் ஆற்றின் பேர்
உனக்குத் தெரிந்தால் கூறிடுவாய்.

3. எண்ணெய் விதையும் தேயிலையும்
எந்த நாட்டின் வளமான
மண்ணில் மிகவும் அதிக மாய்
மண்ட லத்தில் விளைவன சொல்.

4. நிலவி னின்றும் கிளம்பும் ஒளி
நிலத்தில் நம்மை வந்தடைய
அலகாம் வினாடிக் கணக்கதனில்
அறிவிப் பாய்நீ என்றனுக்கு

5. கணக்கே இன்றிக் கொட்டினாலும்
கவலைப் படாமல் பயமின்றி
உணவுப் பொருளாய்த் தேனீயை
உண்ணும் விலங்கின் பெயர் சொல்வாய்.

1. கஸ்பியன் கடல் (1,70,000 சதுர மைல் பரப்பு)
2. நைல் 4,160 மைல் நீளம். 3. இந்தியா.
4. 1·2 செக்கன். 5. சங் (Sunk).

★ துன்பம், துயரம் நம்மைப் பக்குவப்படுத்துகின்றன ★



# பாராட்டி வாழ்த்துகிறோம்

தமிழக அரசின் கலைஞர்கள் என்னும் உயர் விருது பெற்ற பெரியவர்களுள், பண்ணிசைப் பாரம்பரியத்துக்குப் பெரும் பதவியும் பேறும் பெற்ற எங்கள் அன்பர், நண்பர் தருமபுரம் சுவாமிநாதன் அவர்களுக்கு எங்கள் பாராட்டும் வாழ்த்தும். பேரரசன் இராசராசன் முடி சூடிய ஆயிரமாம் ஆண்டு விழாவுக்கு முடிசூடினாற் போல இந்த நியமனம் வந்து வாய்த்தது. திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீனத்தை முன்னிட்டுத் திருமுறைப் பண்ணில் பாரதநாடு, ஈழநாடு, மலேசியநாடு மற்றும் தமிழ் வழங்கும் வெளிநாடுகளெங்கும் பெரும் பெயரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்கும் சுவாமிநாதனுக்கு, இராசராசன் இன்றிருந்தால் பன்னிருவேலி நிலமும் பட்டமும் பரிசுகளும் மேலதிகமாகக் கொடுத்திருப்பான். திருமுறைப்பண் திசையெங்கும் ஒலிப்பதற்கு இராசராசன் அத்திபாரம் இட்டவன். அந்தத் துறையை வளர்த்து வந்தவர்கள் தேசிகர்கள், ஓதுவார்மூர்த்திகள்.

பாரம்பரியமாக குலமுறை சிறக்கப் பழகி வந்த துறையில் முறுக்கேறுவதற்குச் சுவாமிநாதன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத் துறையில் பெரும் பயிற்சி பெற்றதும் வாய்ப்பாயிற்று. பண்ணின் பயனும் இன்னிசையென்பது சுவாமிநாதன் அவர்களைப் பொறுத்தவரையில் எடுத்துக்காட்டாயிற்று.

ஓதுவாமூர்த்தியவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பெரியவர்கள் பலரின் நெஞ்சத்தை நிரப்பியிருந்தார். அன்று பழகிய அவர், எங்களை மறக்காமல் நாங்கள் தமிழ்நாடு சென்றபோதெல்லாம் தம் நண்பர்கள், மாணாக்கர்கள் ஒத்துழைப்போடு எங்களுக்கு நல்ல உபசரிப்பும் உதவியும் செய்தவர். ஒருமுறை 1975ஆம் ஆண்டிறுதியில் நாம் ஐவர் கூட்டமாகச் சென்றபோது, அவர் தாம் தங்கியிருந்த டாக்டரின் மனையொன்றில் எமக்குத் தக்க முறையில் உண்டியும், உறைவிடமும் உதவியதோடு, பகலிரவாக பண்ணிசை விருந்தும் அளித்து இன்புறுத்தியவர்.

அப்பர் சுவாமிகளின் திருஆரூர்த் திருத்தாண்டகத்தில் ''கருவாகிக் குழம்பிருந்து கலித்து'' என்னும் தொடக்கத்துத் தேவாரத்தைக் கனிந்து உருகிப் பாடியதோடு, இங்கு ஒருத்தி தன்னால் வளர்க்கப்பட்டு என்னும் தொடரில் அழுத்தி, அழுது, அரிய கருத்தும் கூறி உருக வைத்தார்.

ஒருநாள் மாலை நீண்ட நேரமாக ''அலைகடலிற் பிறவாத அழகு முத்தே, தூய அன்பருள்ளத்தே பிறந்த செல்வ முத்தே'' என்னும் இரண்டு அடிகளைத் திருப்பித் திருப்பி குழைந்து குழைந்து இனிமையாகப் பாடினார். தொடர்ந்து பாடுங்கள் என்று நாம் விண்ணப்பித்த போது, கண் கலங்கி, ''இதற்கு மேல் அவன் பாடவில்லை'' என்று, தாம் இந்த அடிகளைத் திருச்செந்தூர் வாசலில் பிச்சைக்காரன் வாயாற் கேட்டதாகக் கூறினார்.

இன்னும், தாம் அந்தப் பிச்சைக்காரனிடம் குந்தியிருந்து, மேலும் பாடும்படி கேட்டபோது, அவன் ''வந்தால்தானே'' என்று கூறினானாம். ''ஆடுகின்றான்... இந்த அவனியெல்லாம்... ஆட்டுகின்றான்'' என்னும் தொடர்களை அவர் உருட்டி உருட்டிப் பாடியபோது சங்கதிகள்பல கிளம்பின. அவரின் புகழ் இன்னும் இன்னும் வளர அவர் பல்லாண்டு வாழ்ந்து பண்ணிசையைப் பக்தியோடு பரப்புவாராக. வளர்க திருமுறைப் பண்.

---

முற்றொடர்:

## ஒருவரிப் பழமொழி

61. தன்னூருக்கு ஆனை அயலூருக்குப் பூனை
62. தை பிறந்தால் வழி பிறக்கும்
63. பழி ஓரிடம் பாவம் ஓரிடம்
64. பீடு படைத்தவன் கோடியில் ஒருத்தன்
65. முரட்டுத் தனத்துக்கு முதல் தாம்பூலம்
66. அடிக்கிற கைதான் அணைக்கும்
67. அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்
68. ஆள் பாதி ஆடை பாதி
69. சத்தியசீலனுக்குச் சாவு பெரிதில்லை
70. மயிருள்ள சீமாட்டி எப்படியும் முடிப்பாள்
71. மலிந்த சரக்கு சந்தைக்கு வரும்
72. விழுந்தவன் சிரித்தால் வெட்கக்கேடு
73. கண்டிப்பு இருந்தால் காரியம் நடக்கும்
74. ஒருவர் பொறுமை இருவர் நட்பு
75. ஆண்டியை அடித்தால் சாம்பல் பறக்கும்
76. சந்நியாசிக்கும் சாதிக்குணம் போகாது
77. தேடி உண்பவர் தெய்வத்துக்கு நிகர்
78. பட்டபாட்டுக்குப் பயன் உண்டு
79. பாடுபடாவிட்டால் பயன் இல்லை
80. அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்

---

★ சத்தியத்தில் வழுவியவன் வாழ்வில் வழுவியவனாவன் ★

# மன்னர் மன்னன், மாமன்னன்

பிற்காலச் சோழர்கள் விஜயாலயன் முதல், மூன்றும் இராசேந்திரன் வரை எல்லோரும் ஒவ்வொரு துறையில் மேம்பட்டவர்கள். அவர்களுள் இராசராசன் பல துறைகளில், பல பணிகளுள் பெரும் புகழ் பெற்றவன். தனக்கு வந்த அரசாள் உரிமையைத் தன் சிற்றப்பனின் உளக் கருத்தையறிந்து உடனுதவியவன். பின்னர் தான் அரசனானவன். அவன் அரச பீடமேறியபோது 985ஆம் ஆண்டளவில் பெற்ற பெயர் இராசராசன். அவனின் இயற் பெயர் அருள்மொழித்தேவன்.

இரண்டாம் பராந்தகனுக்கு அவன் தேவி வானவன் மாதேவி வயிற்றில் சதய நாளில் தோன்றியவன் அருள்மொழித்தேவன். இவனுக்கு அண்ணன் ஆதித்த கரிகாலன், அக்கா குந்தவை. இரண்டாம் பராந்தகனுக்குப் பின், மூத்த மைந்தன் ஆதித்தன் சில வருடங்கள் ஆண்ட பின் வீரமரணம் எய்தியதால் தனக்கு வந்த அரசுரிமையை 969 முதல் 985 வரை சிறிய தந்தைக்கு உதவிய பின் தான் முறையாக முடிசூடியவன். தமக்கையாரை உள்ளன்போடு வணங்கி மதித்தவன். இராசராசன் திருத் தமக்கையார் என்று சிலாசனங்களில் பொறிப்பித்தவன். இவன் ஆட்சிக் காலம் 985 முதல் 1014. இக் காலப் பகுதியில் 1001இல் எங்கள் நாட்டுத் தொடர்பு உண்டானது.

பிற்காலச் சோழருள் பெரும் சிறப்புப் பெற்ற பீடுடைய மன்னனுன இவன் தாபித்த அரச பீடம் 200 ஆண்டுகள் வலிமையோடு நிலவியது. இராசராசன் காலத்தில் பல கலைகளும் பரந்த அளவில் சிறந்தன. இவன் பரிபாலனத்தில் கோயில்கள் பல எழுந்தன. கோயிற் பரிபாலனஞ் சிறந்து விளங்கியது. பரிபாலனத்துக்கு ஊர்கள் பலவற்றை உறுதியெழுதிக் கொடுத்திருந்தான். இவன் முப்பத்தைந்து ஊர்கள் கொடுத்தான் என்பது வரலாறு. இவன் கட்டிய கோயில்கள் கலைப்பொலிவு பெற்றவை. கோயிலில் அழகிய திருவுருவங்கள் சிலையாலும் செம்பு முதலிய உலோகங்களாலும் உருவாயின. இவனுடைய சைவ சமயப் பற்றுக்குக் காரணமாயிருந்தவர்களுள் குருவாய ஈசான சிவன், தூக்கி வளர்த்த தமக்கை குந்தவை, சமயப் பெரியார் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடத்தக்கவர்கள். நம்பியாண்டார்நம்பிகளைக் கொண்டு, மறைக்கப்பட்டுக் கிடந்த திருமுறைகளைத் தேடியெடுப்பித்துத் தொகுப்பித்தான். கோயில்களில் திருமுறைகள் ஓதுவதற்குத் தகுதிவாய்ந்த ஓதுவார்களை நியமித்துப் போதிய வருமான ஒழுங்குகள் செய்திருந்தான். மன்னர்களின் மெய்க்கீர்த்தி, அவர்கள் தம் பணிகள் முதலியவற்றைக் குறிக்கும் கல்வெட்டுகள் எழுதும் முறையை இவனே நல்ல முறையில் நெறிப்படுத்தி ஒழுங்கு செய்வித்தான். இவனுடைய பெருமைகள் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் நிரம்பவுள்ளன. சோழநாட்டு முடி, பாண்டிநாட்டு முடி, ஈழநாட்டு முடி என்னும் மூன்று முடிகளையும் அணிந்தவன். மும்முடிச் சோழன். மாலைதீவுகளையும் கைப்பற்றியவன். பொலனறுவையின் அமைப்பை மாற்றிச் சிவன் கோயில் கட்டியவன். திருக்கேதீஸ்வரத்துக்கு இப்பாலும் ஒரு பெரிய ஈசுவரம் கட்டியவன்.

இவன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில் பிரகதீஸ்வரர் ஆலயமாகும். அழகுப் பொலிவும், தொழில் நுட்பமும், கலைவண்ணமும் களிநடம் புரியும் அற்புதக் கோயிலும், விமானமும், நந்தியும், மண்டபங்களும் உலக அதிசயங்களுள் அதிசயமானவை. அண்ணுந்து பார்க்கும் போது விமானத்தளமாக எண்பது தொன் கருங்கல் ஒன்று மேலே போனவகை பெரிய அற்புதமோ சிவன் செயலோ. நான்கு ஆண்டுகளில் கட்டிய இராசராசேச்சுரம் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் கொண்டது. உள்ளே உள்ள மேடை ஒன்று 500 அடி அகலம். இது அக்காலத்துச் செங்கல் கொண்டமைந்தது. அதிலே தான் ஒரே கல்லில் அமைந்த நந்தி 19 அடி நீளம், 8 அடி அகலம், 12 அடி உயரமுள்ளதாயமைந்துள்ளது.

மண்டப வரிசை கர்ப்பக்கிருகம் என்னும் இறையறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், தாபனமண்டபம், நர்த்தனமண்டபம், வாத்தியமண்டபம் என அமைந்துள்ளன. வாயில் காப்போரை ஏற இறங்க அகலப் பார்த்தால் 18 அடி உயரம், 8 அடி அகலம்.

இராசராசன் பெருமை பேச முடியாதது. அவன் பொலநறுவையில் அமைத்த பெரிய ஆலயமும் பெரிய சிவலிங்கமும் இன்றும் உள்ளன. எழுந்தருளிகள் ஐம்பொன் திருவுருவங்கள் பெரும்பாலானவை கொழும்பில் நூதனசாலையை அலங்கரிக்கின்றன. கண்கொண்டு பார்க்கப்பார்க்கப் பசி பறந்து போகும். பார்த்த கண்ணை மீட்டு எடுக்கவியலாத அளவில் ஈடுபடுத்தும்.

# அருள் விருந்து

(ஆதாரம் – தர்மசக்கரம்)

தனித்திருக்கும்போது இறைவனோடு உறவாடலாம்
சோம்பேறியின் மூளை விரைவில் துருப்பிடிக்கிறது
அருள் நாட்டங் கொண்டால் பொறாமை வளராது
ஒருவனுக்கு வாய்க்கும் பண்பு கோடி பொன் பெறும்
நல்வாழ்வு நல்லுபதேசத்திலும் மேலானது
நாம் பிறர்க்குரியவரானுல் பிறர் நமக்குரியவராவர்
தன் எண்ணத்தைக் கட்டியாள்பவன் விவேகி
தன்னை ஆராய்வதற்கு அறிவு தேவை
பிறரை ஆராய்வதற்கு அன்பு அவசியம் தேவை
வினையைத் திருத்தி அமைக்கின் வாழ்வு திருந்தும்
வினைக்கேற்ற பயன் விரும்பாவிட்டாலும் வரும்
தங்கள் புன்மையை மறைக்கில் கோயில் தேவையில்லை
புன்மை பொய்யிலிருந்து பிறக்கிறது
சீரிய ஒழுக்கம் உடலழகினும் அழகியது
மூர்க்கருக்கு அமைதியான மரணம் வருவதில்லை
கொண்ட கோட்பாட்டை மாற்றலாகாது
நன்மை, கேடு என்பன செயலின் நோக்கத்தாலாவன
சன்மார்க்கத்துக்கு நிகரான ஆயுதம் வேறில்லை
உள்ளத்துக்கு உறுதிகொடுப்பது உண்மை
வாக்குக்கு உறுதி கொடுப்பது வாய்மை

★ துரியம் என்பது பேருணர்வுபெற்ற நிலை ★

## வரண்ட வலயங்கள் வளம்பெற வாய்ப்புகள்

தன்கையே தனக்குதவி என்றும், தானே தன்கருமம் பார்த்தல் வேண்டும் என்றும், உடையவன் பாரா விட்டால் ஒரு முழம் கட்டை என்றும் சுய முயற்சியை வற்புறுத்தி நாடோடிவாக்கியவங்கள் நமக்கு அறிவுறுத் தும். நாம் வாழும் மணற்பூமி நீர் வசதி, மலை வசதி யில்லாத வரண்ட வலயமாகும். நாமும் வானத்தைப் பார்த்து பூமியைத் தோண்டி வருடக் கணக்காக வாழ்ந்து வருகின்றோம். நமக்குப் பெரியப்பர், சிற்றப்பர், மாமன்மார் உதவிகள் கிடைப்பதில்லை. வளர்முக நாடு கள் பெறும் வாய்ப்புகள் நம்மை வந்தடைவதில் தாம தங்கள் தடைகள் நேரிடுகின்றன.

எங்களை வாழவைத்த பனையைப் பழையபடிபார்ப் போமாக. பனையபிவிருத்தியே நமக்கு வற்றாத வளம் தரும் என்பது உறுதியாகிவிட்டது. வெளிநாட்டவர் பனம் பண்டங்களின் அருமையைச் சுவைத்து விட்டார் கள். அவர்கள் எம்மிடை வந்து காணி வாங்கிப் பனந் தோப்பு உண்டாக்க மாட்டார்கள். நாமே எங்கள் பனையபிவிருத்தியை நெறிப்படுத்த முந்துதல் வேண்டும். இந்த முறை நவராத்திரி நாள்களில் பனையபிவிருத்தி நடைபெறுவதாகுக. பனம் விதைகளைச் சேகரித்துக் கொடுத்தால் பரவலாக விநியோகஞ் செய்து நட்டுப் பயன் படுத்துவதற்கு முழு உதவி செய்வதற்கு மில்க்வைற் தொழிலக வண்டி வாகனங்கள் என்றும் ஆயத்தமாக உசார் நிலையில் உள்ளன.

எண்ணெய் வகைகளின் விலையேற்றம் வியப்புக்குரி யதாகிவிட்டது. தேங்காய் எண்ணெயின் இடத்தில் இலுப்பெண்ணெய் ஈடுசெய்ய இடமுண்டு. அது உடற் சுகத்துக்கும் உகந்தது. நாங்கள் திட்டமிட்டு இலுப்பை மரங்களை உடனடியாக எங்கும் உண்டாக்கலாம் தானே. தானே வளரும் இலுப்பை கோயில் வீதியெங்கும் நிழல் தருவதாக. வேம்பு வீதியோரங்களை நிழல் செய்வதற்கு நிரையாக நிற்பனவாகுக.

அடுத்து வரப்போகிற மழைக் காலத்துக்கு நாம் செய் யும் பெரிய வரவேற்பு, இன்றே செய்தாக வேண்டும். இதோ மண்வெட்டிகள், தாச்சிச் சட்டிகள், குளங்களை ஆழமாக்கி நீரைத்தேக்க வாருங்கள் என்று கரங்கூப்பி அழைக்கின்றுர் மில்க்வைற் தொழிலதிபர். சேரவாருங்கள். உங்கள் சேவை உங்கள் ஊருக்குத்தேவை. வாரத்தில் ஒரு நாள் சேவை, வருடமுழுவதற்கும் போதுமானது. வாருங்கள் குளந் தோண்டி, மரம் நாட்டி வரண்ட வலை யத்தை வளம் கொழிக்கச் செய்வோமாக.

## ஒல்லாந்தரின் யானை வியாபாரம்

ஆங்கிலேயர் இலங்கையில் செம்பு நாணகங்கள் தயாரித்தபோது, இலங்கையின் பிரதான ஏற்றுமதி யானை எனக்கண்டு நாணகத்தில் யானை உருவம் பொறித் தனர். இந்த யானை வியாபாரத்தின் முன்னோடிகள் ஒல்லாந்தராவர்.

இலங்கை யானைகள் தனிப்பட்ட குணவியல்பு வேலைத்திறன் அமைந்தவை. காலி, மாத்தறை, வன்னி, மாதோட்டம், முசலி, பெருங்களி, பூநகரி முதலிய இடங்களில் யானை பிடிக்கும் நிபுணர்கள் அகப்படுத்திய யானைகள், ஆனையிறவுக்கிப்பால் யாழ்ப்பாணத்தினூ டாகக் காரைநகருக்கு கொண்டு சென்று இந்தியாவுக்கு அனுப்பினர்.

ஒல்லாந்தர் இருந்த இடத்தில் இருப்ப வன்னியர்கள் அவர்களுக்கு யானை கொடுக்க வேண்டியவர்களாயினர். வன்னியருள் வீரம்மிகுந்தோர் சிலர் யானை கொடுக்க மறுத்ததும் உண்டு. பனங்காமம், பழைய விளாங்குளம், கரிக்கட்டுமூலை, முள்ளியவளை முதலிய இடங்களில் வன் னியர் வீரர்களாயிருந்தனர். இவர்கள் யானை கொடுக்கத் தவறியதும் தாமதித்ததும் உண்டு. இவர்களின் செருக்கு அதிகாரிகளாய ஒல்லாந்தரைத் திகைக்க வைத்ததும் உண்டு.

## பிரார்த்தனை மண்டபம்

யாழ்ப்பாணத்தில் மார்பு நோயாளருக்கு இயற்கையா யமைந்த நல்ல சூழலில், மனோரம்மியமான மயிலிட்டிக் கடற்கரையில் அமைந்த சைவத் திருக்கோயிலில், மன வருத்தம் நீங்கவும், மார்பு நோய் வேகந் தணிக்கவும் அமைந்த பிரார்த்தனை மண்டபத்தைச் சைவ சம்பிரதாய பூர்வமாக மில்க்வைற் தொழிலதிபர் 21-9-1984 வெள்ளிக் கிழமை நண்பகல் திறந்துவைத்துள்ளார்கள். நோயாளர் கண்டபடி உரத்துப் பேசி, வருத்தத்தை மேலும் வலுப் படுத்தாமல், பிரார்த்தனை மண்டபத்தில் அடக்க ஒடுக்க மாய், மௌனமாயிருந்து தியானிப்பதற்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

## Learn your English

**I. Find out a correct adjective to mean the words:**

**Example:** A plant that lives for many years — perenial

1. Hand writing that cannot be read
2. A book uninteresting to read
3. Work that is neither good nor bad
4. A person who is particular about small things
5. The life of shepherds
6. An old man of high charecter
7. A son who gives willing obedience
8. A rebellious unmanagable son
9. Knowledge based on observation and experiment
10. A thing that lives long time

**Answers:-**

| | |
|---|---|
| 1. illegible | 2. unreadable |
| 3. mediocre | 4. meticulous |
| 5. pastoral | 6. venerable |
| 7. dultful | 8. refracrory |
| 9. emperical | 10. perenial |

★ சாஸ்திரம் இல்லாத சமயம் தேய்ந்துவிடும் ★

**Give words opposite in meaning to the following:-**

**Example:** strong — weak
forget — remember
long — short

(happy, play, state, soft, shut, well, dirty, white, below, awake, calm, empty.)

1. The window was clean but the paint was..........
2. It was stormy yesterday but today it is..................
3. All work and no..............makes Jack a dull boy
4. Some of the squares are black and some are.......
5. My friend fell asleep, but I kept.................
6. The window is open, but the door is...........
7. These buns are not fresh, they are..............
8. Leela spells ........., but writes badly
9. An aeroplane flew above the clouds and went......
10. One tin of oil was full but the other was.....
11. Thanga was miserable, but her sister was.......
12. These fruits are.......... but those are hard

**Use the given words to fill the blanks in the sentences:**

1. Rajan gave a.........on the door (rap, wrap)
2. Please.........the book in this paper (rap, wrap)
3. Our cook bought some................ (meet, meat)
4. Our teachers are going to.........today (meet, meat)
5. Mother.........a short eat for tea (made, maid)
6. The..............cleaned the vessels (made, maid)
7. My friend paid the.........for me (fair, fare)
8. Father took me to the........ yesterday (fair, fare)

**II. Find out the meanings of the doctors words:-**

**Example:** insomnia = sleeplessness

1. contusion 2. fracture 3. carteledge
4. cardiac failure 5. insomnia 6. dyspepsia
7. syncope 8. vertigo 9. an articulation
10. adipose tissue

**Answers:**

1. bruise 2. break in a bone 3. gristle
4. heart failure 5. sleeplessness 6. indigestion
7. fainting 8. giddiness 9. joint
10. fat

**III. Give the collective name for these:**

**Example:** group of chicks = brood

1. young pigs 2. flowers 3. cavalrymen
4. field guns 5. trees 6. aeroplanes
7. porpoises 8. cottages 9. sheep 10. chicks

**Answers:**

1. litter 2. bunch 3. troop 4. battery
5. spinny 6. flight 7. school 8. village
9. flock 10. brood

## உங்களுக்குத் தெரியுமா?

விடைகள் வேறிடம்

1. தாதிமார் சேவையை ஆரம்பித்த பெருமாட்டி?
2. இங்கிலாந்தின் நீளமான ஆறு?
3. பெரியவர்களுக்கு எத்தனை பற்கள்?
4. இலையானுக்கு எத்தனை கால்கள்?
5. பொதுமக்கள் கருத்தறிய வாக்களிக்கும் முறை?
6. ஐஸ்லாந்து மக்களின் மொழியின் பெயர்?
7. நியூயோக் நகரம் அமைந்த நதி?
8. தென்னிந்திய முறையில் ஆலயங்கள் உள்ள வட இந்தியா?
9. "கானு" இதன் பழைய பெயர்?
10. அரசியர் மூவர் இதை எழுதியவர்?
11. இத்தாலி, சிசிலி நாடுகளைப் பிரிக்கும் நீரிணை?
12. மரங்கள் இல்லாத ஆட்டிக் பகுதியின் பெயர்?
13. ஒரு லட்சம் என்றால் எவ்வளவு?
14. மிலியன் என்பது எவ்வளவினது?
15. டாட்டா தொழிற்சாலை உள்ள இடம்?
16. ஐந்து ஆறுகளின் அமைப்பால் உண்டான பிரதேசம்?
17. சீனரின் பெரிய தத்துவஞானி?
18. நியூசிலாந்து நாட்டின் தலைநகரம்?
19. பிரித்தானிய பொதுநலவாயத்தின் முதல் நாடு?
20. தெய்விக நீரூற்றைக் கண்ட பெண்மணி?

## தமிழ் வழக்கில் உள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| மாதம் | — | திங்கள் |
| மாதா | — | தாய் |
| மாதாந்தம் | — | திங்களிறுதி |
| மாதுலன் | — | மாமன் |
| மாற்சரிசம் | — | பொறாமை |
| மாத்திரம் | — | மட்டும் |
| மாத்திரை | — | அளவு |
| மானசம் | — | எண்ணம் |
| மானபங்கம் | — | பெருமைக் குறைவு |
| மானியம் | — | இறையிலி நிலம் |
| மாந்தம் | — | செரியாமை |
| மாந்திரீகன் | — | மறைமொழிக்காரன் |
| மாந்மியம் | — | சிறப்பு |
| மாமிசம் | — | ஊன் |
| மாரகம் | — | ஏவற்கொலை |
| மாரன் | — | வேள் |
| மாருதம் | — | காற்று |
| மார்க்கம் | — | நெறி |
| மார்ச்சரியம் | — | உட்பகை |
| மார்ச்சனை | — | முழவொலி |
| மார்ச்சாலம் | — | பூனை |
| மாலுமி | — | கப்பலோட்டி |
| மாவுத்தன் | — | யானைப்பாகன் |

★ பொருந்தாத எண்ணங்கள் வாழ்வைப் பாழ்படுத்தும் ★

## கோவளத்தின் பனம் விதை

கோவளம் என்பது காரைநகரில் ஒரு பகுதி. அங்கே ஞானவைரவ சுவாமி காவல் தெய்வம், குலதெய்வம். கோயிலை மையமாகக் கொண்ட கோவளத்து இளைஞர்களின் கோட்பாடு பெரியது, உயர்ந்து, உறுதியானது, உய்திபயப்பது. அவர்கள் உருவாக்கிய சைவ மன்றத்தில், அவர்கள் மனிதராக உருவாகின்ருர்கள். அவர்கள் கொண்ட ஊக்கத்தால் ஊரிலுள்ள பனம் விதைகள் ஓரிடத்தில் குவிந்தன. குறிப்பிட்ட நாளில் மில்க்வைற் பணிப் பிரசார லொறியில் ஏறின. இவற்றைக் குவித்து, ஏற்றிய இளைஞர்கள் கேட்ட பிரதியுபகாரம் என்ன? பொன்னைப் பொருளைக் கேட்கவில்லை, பின்னை எதனைக் கேட்டார்கள் என்ருல் புத்தகமாகிய செல்வத்தை இன்னும் இன்னும் தாருங்கள் என்று இருகை நிறையப் பெற்ருர்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியும், வாழ்த்தும்.

## தமிழ்நாட்டு வழிபாட்டு முறை

தமிழ்நாட்டு வழிபாட்டு முறையில் மிக முக்கியமாயிருந்த நெறி தேவாரம் பாடுதலாகும். தேவாரம் பாடுவதற்குக் கண் தெரியாதவர்களும், அவர்களுக்கு உதவியாகப் பார்வை வளம் உள்ளவர்களும், அவர்களை நெறிப்படுத்துவதற்குத் தேவார நாயகமும் இருந்தார்கள். அவர்களுக்கு நல்ல வருவாய் கொடுக்க நிலங்களும் பிறவும் வழங்கப் பெற்றிருந்தன.

தேவாரம் பாடுவதற்கு ஓதுவார் கூட்டமும், தானிகர் கூட்டமும், கட்டளையார் கூட்டமும் இருந்தார்கள். இசைக் கருவிகளுள் சாரங்கி என்னும் வாத்தியம் தேவார பாராயணத்துக்கு மிகுந்த அநுகூலமாயிருந்தது.

அடியார்களும் சேர்ந்து பாடியின்புறும் கூட்டுப் பிரார்த்தனை வழக்கம் அன்றும் நிலவியது. வேதாகமம் வல்ல காசிவாசி செந்திநாதையர் என்பவர், யாழ்ப்பாணத்துக் குப்பிழான் ஊரைச் சேர்ந்தவர். அவர் காசியில் பத்தாண்டுகள் வாழ்ந்து வேதங்களை முறையாக அறிந்தவர் நீலகண்ட சிவாசாரியர் பிரம்ம சூத்திரத்துக்கு எழுதிய பெரிய பாடியத்தைத் தமிழில் எழுதியவர். சிவ ஞானபோத வசனலங்கார தீபம், கந்தபுராண நவநீதம் முதலிய பல நூல்களைச் செய்தவர்.

தேவாரம் வேதசாரம் என்னும் ஆராய்ச்சி நூலை அருமையாக எழுதியவர். தேவாரப் பண்ணில் வெகுவாகத் தோய்ந்து பாடுவதற்கும், உதவியாகச் சாரங்கி வாத்தியம் வாசிக்கவும் கைதேர்ந்தவர். ஆறுமுகநாவலர் சிவபூசை செய்யும் வேளைகளில் தாமும் உடனமர்ந்து திருமுறையோதும் வாய்ப்புப் பெற்றவர்.

சாரங்கி என்னும் வாத்தியம் வில்போன்ற அமைப்பினையுடையதாகலின் வில் யாழ் எனவும் பெயர்பெற்றது. சாரங்கி வாத்தியம் பத்தொன்பதாம் நூற்ருண்டில் தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் வெகுவாகப் பரவியிருந்தது.

ஆறுமுகநாவலர் சிதம்பரத்திலிருந்து பொன்னேதுவார் முதலானேரை இங்கழைத்து வந்து, யாழ்ப்பாணத் தாருக்குப் பண்ணிசை பயில்வித்தார். அவ்வழியில் அருமை பெருமையாய் இருபதாம் நூற்ருண்டிலும் எஞ்சியிருந்து பண்ணில் தோய்ந்து பாடி வந்தவர் குப்பிழான் செல்லத்துரை என்பாராவர். இவர் 1938ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற சைவப் பெருவிழாவில் தேவாரம் பாடிப் பெருமக்களால் இசை வல்லார் என்னும் பட்டமும் தங்கப் பதக்கமும் வழங்கப் பெற்றவர்.

தமிழ்நாட்டு வழிபாட்டு முறையில் தேவாரம் பாடும்போது வாத்தியங்கள் கொண்டுவர மறந்துவிட்டாலும் கோயிலிலே தூண்கள் உதவியாயிருந்தன. கருங்கற்றூண்களைத் தாளம் பிசகாமல் அங்கும் இங்கும் தட்டும்போது இனிய ஓசை பிறக்கும். இன்றும் அத்தூண்கள் அர்த்த மண்டபங்களில் அழகாக நிற்கின்றன.

## பிளேட்டோ

சிந்தனையாளர் வரிசையில் உலகப்புகழ்பெற்ற முன்னேடி பிளேட்டோ. அவர் மறைந்து 2370 ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவரின் சிந்தனைச் செல்வங்கள் உரை நடைவாயிலாக உதிர்ந்தவை. அவை:- Gorgia, Meno, Phaedo, Symposium, Republic, Parmenides, Apology, Crito.

## ஒன்ராறியோ நகரங்கள்

கனடா தேசத்தில் ஒன்ராறியோ ஒரு மாநிலம். அங்குள்ள பெருநகரம் ஒற்ருவா அதுவே கனடாவின் தலைநகரம். அதையடுத்த பெருநகரங்கள் ஒன்ராறியோவில் உண்டு. அவை ரொறன்ரோ, ஹமில்ரன், வின்சர், லண்டன் என்பனவாம்.

## முறிவு தறிவு எலும்பு உடைவு முதலியன

குழந்தைப் பருவத்துக் குருத்து எலும்புவளையுமேதவிர முறியாது. ஆனல் முதியவர்பாடு முறிவாய்விடும். அம் முறிவுதானும் வைத்தியர் பரிபாஷையில் சாதாரணமானது, கலப்பானது என்றெல்லாம் வழங்கும். அவை Simple, Compound, Complicated, Comminuted, Impacted என்பனவாம்.

## காடுகெடுப்பதற்கு அளவு

காடு கெடுத்து நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்குதல் தமிழ் நாகரிகம். உலகப் புகழ்பெற்ற ஆற்றங்கரை நாகரிகங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்த பின்பும் குளத்தங்கரை நாகரிகம் தலையெடுத்து நிலவுகிறது. காடு கெடுத்த மன்னர் அளவோடு வெட்டினர்கள். ஓய்வு நேரங்களில் வேட்டையாடப் போனர்கள். காடில்லாமல் வேட்டையேது? காட்டை அளவறிந்து வெட்டுதல் வேண்டும். அதுவும் ஒரு தருமம்.

காட்டைக் கண்டபடி வெட்டினல் காட்டை நம்பி வாழ்பவர்களும், அயற்கிராமவாசிகளும், காட்டு மிருகங்களும் புகலிடமின்றித் தவிக்கவேண்டி வரும்.

★ சுயநலத்தை வென்ருல் தீமைகளை வெல்லலாம் ★

# காலம் பெறுமதியானது
කාලය අගනේය
TIME IS PRECIOUS
MILKWHITE




உங்களுடைய
சகலவிதமான
ஆடைகளையும்
மின்வேகத்தில்
சலவை செய்து
பளிச்சென்ற
வெண்மையைக்
கொடுப்பது

விஞ்ஞானரீதியில் தயாரானது

## மில்க்வைற்
## சலவைப் பவுடர்

விசேஷமாக மாணுக்கியர் அணியும்
வெண்ணிறச் சிருடைகளை
விரைவில் அழுக்கு நீக்கித்
தூய வெண்ணிறம் பொருந்தச்
சுத்தஞ் செய்வது

**மில்க்வைற் சலவைப் பவுடர்**
பயன்படுத்துவோர் வசதிகருதிச்
சிறிய பைக்கற்றுகளிலும் எங்கும் கிடைக்கும்.

**இரண்டு சலவைப் பவுடர்**
**வெற்றுப் பெட்டிகளைக் கொடுத்து**
**1 பொலித்தீன் பை இனுமாகப் பெறலாம்.**


## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. புளோறன்ஸ் நைற்றிங்கேல் 2. தேம்ஸ்
3. முப்பத்திரண்டு 4. ஆறு 5. நிவெறண்டம்
6. ஐஸ்லான்டிக் 7. ஹட்சன் 8. பிருந்தாவனம்
9. கோல்ட்கோஸ்ற் 10. அ. ச. ஞானசம்பந்தன்
11. மெசினு 12. துண்ரு 13. நாருயிரம்
14. பத்துலட்சம் 15. யாம்செட்ளர் 16. பஞ்சாப்
17. கொன் பூசியஸ் 18. வெலிங்ரன் 19. கனடா
20. சென்பெனடெற்ரு

## மரக்கறியுணவே மனிதவுணவு

மரக்கறியுணவு பற்றி பேனுட்ஜென்சென் எழுதிய

**பூரண ஆரோக்கியத்துக்கு அடிப்படையுணவு**

தொடர்பான தகவல்கள் தொடர்ந்து வெளிவரும்

''உடனடியாக மதுவையும் புகையையும் ஒதுக்கி விடுங்கள்.'' என்று ஆத்திசூடிபோல் ஆரம்பிக்கிருர் அவர்.

## திராவிடம் திருவிடம்

சேர்யோன் மார்ஷல், சேர் அலெக்சாண்டர் கணிங்ஹாம் முதலான அகழ்வாராய்ச்சி நிபுணர்கள், மொஹஞ் சதரோ, ஹரப்பா முதலாய நகரங்களை அறிந்து, தமிழ் நாகரிகத்தின் தொன்மையை நிருபித்தமைக்குப் 15 ஆண்டுகளுக்கு முன்னர், எங்கள் யாழ்ப்பாணத்து வண்ணுர்பண்ணை தா. பொன்னம்பலம் பிள்ளை திராவிடர் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையைத் தமிழ் நாட்டுப் பாளையங்கோட்டைச் சைவமகா சங்கத்தில் படித்துள்ளார்.

பொன்னம்பலம்பிள்ளை திருவாங்கூரிலே மதுபரிபாலன ஆணையாளராயும், அவர் சகோதரர் செல்லப்பா பிள்ளை உயர் நீதியரசராயும் இருந்தவர்கள். இருவருஞ் செய்த செந்தமிழ்ப் பரிபாலனமும் சைவபரிபாலனமும் செப்பரியதாகும்.

தமிழ் நாட்டுக் கோயம்புத்தூர் பிரதேசமே கிட்கிந்தை என்பர். தூய்மை, அழகு முதலியன அமையப் பெற்ற இடம் திருஇடமாய், பிறர்வாயில் திராவிடமாய் வந்தது என்பர். திருவாங்கூர், திருவாழுங்கோடு என்பதை எடுத்துக்காட்டுவர்.

திரு என்னும் அடை தென்னுட்டுக்கு அமைவதற்கு கோதாவரி, கிருஷ்ணு, தென்பெண்ணை, வடபெண்ணை, பாலாறு, காவேரி, கொள்ளிடம், வைகை, தாம்ரபரணி முதலிய ஆறுகள் செழிப்பூட்டின என்பர். இன்னும் ஆயிரக்கணக்கான ஆலயங்களும், அறச்சாலைகளும் உள்ள பிரதேசம் என்பர்.

இந்தியாவின் தென்பாகம் குமரியில் முடியவில்லை. பஃறுளியாற்றின் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொண்டது. ஏறக்குறைய 800 காதம் விசாலித்திருந்த தரையில் இலங்கை, மலேயா, யாவா, சுமாத்திரா, பண்டா, செலிபிஸ், போர்ணியோ, புதுக்கினி, நியூசிலந்து முதலான தீவுகள் இருந்தனவாய நிலங்களின் எச்சங்களே.

இன்று மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளில் தமிழ்மொழி கலந்திருக்கும் அமைப்பில், யாவா முதலிய நாடுகளில் வழங்கும் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் மிகுதியாக வழங்குகின்றன. இதை வலியுறுத்துவதற்கு, ரெயிலர் என்பார் நியூசிலந்துப் பழங்குடியினராய மேஓரிஸ் மக்களின் மொழியில் தமிழ் கலந்திருப்பதைக் குறிப்பிட்டுள்ளதைக் கூறலாம்.

திராவிடப் பிரதேசமாய நெடுநிலம் நியூசிலந்துவரை வியாபித்திருந்ததால் தமிழ்மொழி, நியூசிலந்துவரை நின்று நிலவி ஒலிக்கிறது.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-10-84.